2. அறிவிப்புகள்.

(1) அவை நிகழ்ச்சி நிரல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் அலுவல்கள் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்பட்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் அனுப்புதல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

(3) மாற்றுத் தலைவர் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 6-வது விதியின் கீழ் மேலவையின் 65-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன் —

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. க. அருணாசலம்.

3. ஆளுநர் உரை மீதான விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை திரு. வலம்புரி ஜான் அவர்கள் முன்மொழிவார்கள்.

திரு. வலம்புரி ஜான் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்".

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

@ 117-152 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.